بسم الله الرحمن الرحيم

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 31.10.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 31, Oct 2014 (Tamil)

# நன்மைக்காக பாடுபடுதல் மற்றும் அனைவருக்கும் அமைதி

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:-

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். அதாவது மக்களுடைய பயனுக்காக தோற்றுவிக்கப்பெற்ற நீங்கள் (மற்றெல்லோரையும் விட) சிறந்த கூட்டத்தினர் ஆவீர்கள். முஸ்லிம்களின் மிகப்பெரிய பணி என்னவென்றால் உலகம் அவர்களிடமிருந்து பயன் பெற வேண்டும். முஸ்லிம்களின் மூலமாக உலகிற்கு நன்மையே சேர வேண்டும். தீங்கு சேரக் கூடாது. ஆனால் இப்போது உலகத்தின் நிலைமையை நாம் பார்க்கின்றோம். முஸ்லிம் அரசாங்கங்கள், பிரிவுகள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றின் மூலமாக உலகில் எந்த அளவிற்கு குழப்பம் ஏற்பட்டுள்ளதென்றால், உலகம் இஸ்லாத்தின் பெயரை கேட்டாலோ அல்லது முஸ்லிம் என்றாலே அஞ்சுகின்றது. அஞ்சுகின்ற நிலைமை இருக்குமென்றால் யார் முஸ்லிம்களின் கூற்றைக் கேட்பார்கள். அல்லது இவர்களின் மூலமாக நமக்கு நன்மையே கிடைக்கும் என்று யார் தான் கருதுவார்கள். யார் நம்மவர்களது கழுத்துக்களையே வெட்டுவார்களோ, ஒன்றும் அறியாதவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள், முதியவர்கள் எவ்வித பாகுபாடுமின்றி கொலை செய்வார்கள் என்றால், எவ்வித காரணமுமின்றி தன்னுடைய கொள்கையை பின்பற்றாதவர்களை அடிமையாக்குகின்றார்கள் என்றால், அவர்கள் மூலமாக முஸ்லிம் அல்லாதவர்கள் எவ்வாறு நன்மையை பெற முடியும் என்று நாம் நம்பிக்கை கொள்ள முடியும்.

இவர்கள் செய்கின்ற இந்த செயல்களினால் நிச்சயமாக இப்படிப்பட்ட முடிவுகள் தான் வெளிப்படும். மேலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதாவது முஸ்லிம்களைக் கண்டு உலகம் அஞ்சுகின்றது. இப்படிப்பட்ட மக்கள் உலகத்திற்கே அருட்கொடையாக வந்த நம்முடைய அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்களின் பெயரால் இந்த செயலை செய்யும் போது நிச்சயமாக அஹ்மதிகளுக்கு வெட்கமும், வேதனையும், கஷ்டமும் ஏற்படுகின்றது. இவர்கள் இஸ்லாத்தின் பெயரையும் அவமதித்துள்ளார்கள். மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய முன்மாதிரியையும் உலகிற்கு முன்னால் தவறான முறையில் வெளிப்படுத்திக் காட்டக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் ஓர் அஹ்மதி என்ற நிலையில் இவர்களது இந்த விஷயத்தால் நமக்கு எவ்வித அவநம்பிக்கையோ, நிராசையோ இல்லை. முஸ்லிம் அல்லாதவர்களிடம் நான் முஸ்லிம்களின் இந்த நிலையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கும், இஸ்லாத்தின் உண்மைக்கும் சான்றாக வைக்கின்றேன். அதாவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு நேரம் வரும். அப்போது முஸ்லிம்களின் நிலைமை இவ்வாறு இருக்கும். காலகட்டத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த வீழ்ச்சியின் காலம் இவ்வளவு காலம் கடந்த பிறகு ஆரம்பமாகும். பிறகு இவ்வளவு காலம் வரை இந்த இருள் நிறைந்த காலம் சென்று கொண்டே இருக்கும். இதன் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தோற்றம் நிகழும். அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் அழகான போதனைகளை உலகில் தொடரச் செய்வார். அந்த போதனை திருக்குர்ஆனில் அதன் அசல் வடிவத்தில் இருக்கின்ற போதனையாகும். அதன் ஒவ்வொரு எழுத்துக்கு ஏற்பவும் செயல்பட வேண்டும் என்பது பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கையிலிருந்து நமக்கு தெரிய வருகின்றது. இந்த பிளவுபட்ட காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பிற்கேற்ப அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வந்து விட்டார்கள் என்று அஹ்மதிகளாகிய நாங்கள் நம்பிக்கை

கொள்கின்றோம். இது வாதம் மட்டுமல்ல. மாறாக, அவரது வருகையின் தொடர்பாக திருக்குர்ஆனும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் எடுத்துக் கூறிய வானம் மற்றும் பூமியின் அடையாளங்களும் நிறைவேறின. மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு இஸ்லாத்தின் அழகிய போதனையின் மூலமாக ஒளியூட்டியுள்ளார்கள். நம்முடைய உள்ளத்தை ஒளிமயமாக்கினார்கள். இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த அழகிய போதனையின் படி அமல் செய்து கொண்டிருக்கின்றது. இந்த விஷயங்களை அவர்களிடம் கூறும் போது, இஸ்லாம் பொய்யான மார்க்கமல்ல. மாறாக, இஸ்லாத்தின் பெயரால் உலகில் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற அந்த மக்களின் தவறாகும் என்பதை ஏற்றுக் கொள்கின்றார்கள். ஆக, உலகத்தை நன்மையின் பக்கம் அழைப்பது, ஒவ்வொருவருக்காகவும் நன்மையை நாடுவது ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பாகும். இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஏனென்றால், அல்லாஹ் நம்மீது கருணை காட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். அமைதியுடன் இருப்பது மட்டும் நமது வேலையல்ல. தீமையான பணிகளில் இருந்து விலகியிருப்பது மட்டும் நமது பணியல்ல. குழப்பங்களிலிருந்து விலகியிருப்பது மட்டும் நமது பணியல்ல. மாறாக, உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவது, அதற்காக முழுமையாக முயற்சி செய்வது நமது பணியாகும். உலகத்தை தீமையிலிருந்து தடுப்பதற்கு முயற்சி செய்வது நமது பணியாகும். உலகத்தை குழப்பத்திலிருந்து விலக்கி வைப்பதற்கும், குழப்பத்திலிருந்து பாதுகாப்பதற்கும் முயற்சி செய்வது நமது பணியாகும். ஏனென்றால், இந்த பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணிகளில் ஒன்றாகும். அன்னார் மீண்டும் நன்மையை இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப தொடரச் செய்ய அனுப்பப்பட்டுள்ளார்கள். ஆக, இந்த உலகத்திற்காக நன்மையை நாடுவது, மேலும் அன்னாரிடம் பைஅத் செய்தது, மேலும் இறைவனுடைய கட்டளை ஆகியவை நம்மிடம் எதை விரும்புகின்றதென்றால் நாமும் செயல் களத்தில் இறங்க வேண்டும். மேலும் உலகிற்காக நன்மையை நாடுவது, தீமையிலிருந்து விலக்கி வைக்க முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். நாம் முஸ்லிம்களுக்காகவும் நன்மையை நாடுகின்றோம். முஸ்லிம் அல்லாதவர்களுக்காகவும் நன்மையை நாடுகின்றோம். கிறிஸ்தவர்களுக்காகவும் நன்மையை நாடுகின்றோம். மேலும் ஹிந்துக்களுக்காகவும், மற்ற மதத்தைச் சார்ந்தவர்களுக்காகவும், எதுவரை என்றால் நாத்திகர்களுக்காவும் நன்மையையே நாடுகின்றோம். ஏனென்றால் நாம் தான் அவர்களுக்கு அல்லாஹ்வின் அருகில் கொண்டு செல்கின்ற வழியைக் காட்ட வேண்டும். நாம் குற்றங்களில் அகப்பட்டுள்ள மக்களுக்காகவும், திருடர்கள், கொள்ளைக்காரர்கள், அநீதியாளர்கள் போன்ற எல்லா மக்களுக்காகவும் நன்மையையே நாட வேண்டும். ஏனென்றால், இவர்கள் அனைவரும் ரப்புல் ஆலமீனுடைய அடியார்கள் ஆவார்கள். நாம் அல்லாஹ்வின் அனைத்து அடியார்களுக்காகவும் நன்மையையே நாட வேண்டும். மேலும் அவர்களை நன்மையின் வழியில் செல்வதற்கும், தீமையிலிருந்து விலகக்கூடிய வழியை காட்ட வேண்டும்.

அல்லாஹ் உஹ்ரிஜத் லின்னாஸ் என்று கூறி நம்முடைய செயல் களத்தை விரிவுபடுத்தியுள்ளான். எனவே நாம் உலகத்தின் நன்மைக்காக அவர்களுக்கு இறைவன் வரை சென்றடையச் செய்யக்கூடிய சரியான வழியைக் காட்ட வேண்டும். அவர்களை இறைவனுடைய கட்டளையின் படி வழிநடக்க கவனமூட்ட வேண்டும். அவர்களிடம் நாம், இந்த வாழ்க்கை ஒரு நாள் முடிவு பெற்றுவிடும். பிறகு ஒவ்வொருவரும் நம்முடைய செயல்களுக்கேற்ப நன்மையையும் தீமையையும் பெற வேண்டியதுள்ளது. சிறந்த விளைவு ஏற்படுவதற்காக இறைனோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூற வேண்டும். ஆனால் இந்த விஷயங்கள் நாம் எப்போது நம்முடைய முடிவின் பக்கம் கவனம் செலுத்தாமல் இருப்போமோ அப்போது வரை மற்றவர்களுக்கு இவ்விஷயத்தை புரிய வைக்க முடியாது. ஆக, இந்த பணியை நாம் கவலையோடும், நம்மை நாமே ஆராய்ந்தவாறும் செய்ய வேண்டும். இந்த பணிகளை செய்யும் போது நமக்கு சில கஷ்டத்தையும் எதிர் கொள்ள வேண்டியதுள்ளது. எதிர் கொள்ளவும் செய்கின்றோம். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறும் நாம் இந்த கஷ்டங்களையும் உலக எதிர்ப்பையும் ஒவ்வொரு அடியிலும் எதிர்நோக்கியுள்ளோம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. நமக்கு இந்த விஷயம் ஒன்றும் புதிதல்ல. மாறாக, எத்தனை நபிமார்கள் வந்தார்களோ அவர்களும், அவர்களை ஏற்றுக் கொண்டவர்களும் எதிர்ப்பை சந்திக்க நேரிட்டது. ஆனால், அவர்களோ குறிப்பிட்ட இடத்திற்கும், சமுதாயத்திற்கும் அனுப்பப்பட்டதனால் அவர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்பும் குறுகியதாகவே இருந்தது. ஆனால் எப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் முழு உலகிற்கும் தோன்றினார்களோ அப்போது பெருமானார் (ஸல்) அவர்களை முழு உலகமும் எதிர்த்தது. மேலும் எதிர்த்துக் கொண்டிருக்கிறது. இதே பணி தான் பெருமானார் (ஸல) அவர்களைப் பின்பற்றியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடையதும் ஆகும். எனவே அன்னாரை ஒவ்வொரு மார்க்கமும், சமுதாயமும் எதிர்த்தது. மேலும் எதிர்த்துக் கொண்டிருக்கிறது. சில இடங்களில் குறைவாகவும் சில இடங்களில்

அதிகமாகவும். மேலும் இதன் தொடர்ச்சி முடிவடையவில்லை. மேலும் முடிவடையவும் செய்யாது. உலகத்தில் சந்தேகமின்றி அஹ்மதிய்யா ஜமாஅத் செய்யக்கூடிய பணிகளை பாராட்டக் கூடியவர்கள் இருக்கத்தான் செல்கின்றனர். ஆனால் மார்க்கம் என்ற ரீதியில் வியக்கத்தக்க முன்னேற்றங்கள் கிடைக்கும் போது சமுதாயம் என்ற அடைப்படையில் நமக்கு மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்பையும் சந்திக்க நேரிடும். அல்லது குறைந்தது மார்க்கத்தைப் பெயர் தாங்கிய அளவில் பின்பற்றக் கூடியவர்கள் அவர்கள் தரப்பிலிருந்து எதிர்ப்பு ஏற்படலாம். ஆகவே, எழுதப் படிக்கத் தெரிந்த இந்த நாட்டில் இவர்களிடமிருந்து எப்போதும் நமக்கு நன்மைக்கான பதில் நன்மையாகவே கிடைக்கும் என்று நாம் நினைக்கக் கூடாது.

உலகம் நம்முடன் எவ்வாறு வேண்டுமானாலும் நடந்து கொள்ளட்டும். அது அவர்களுடைய வேலையாகும். ஆனால் இறைவனுடைய உதவி நம்முடன் இருக்கின்றது. அல்லாஹ் நம்முடைய பெயரை சிறந்த சமுதாயம் என்று வைத்திருக்கின்றான். எனவே நாம் நன்மையை பங்கிட்டுக் கொடுப்பதிலிருந்து ஒருபோதும் பின்வாங்கக் கூடாது. மேலும் இந்த நன்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்டவைப்பதாகும். அல்லாஹ்வின் பக்கம் உலகத்தை அழைக்க வேண்டும். ஆக, இதை விட சிறந்த நன்மை வேறு எதுவாக இருக்க முடியும் ?. எந்த அளவிற்கு தீமையும், அசுத்தமும், இந்த காலத்தில் நடக்கின்றதென்றால், மேலும் அரசாங்கங்களும், மீடியாக்களும் இதை எந்த அளவிற்கு பரப்புகின்றதென்றால், உலகம் இதற்கு முன்பு இதை கண்டதேயில்லை. இன்று ஷய்த்தான் எவ்வளவு வேகமாக தாக்குதல் தொடுக்கின்றான் என்றால் இதற்கு முன்பு இவ்வாறு ஒரே நேரத்தில் உலகத்தில் ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்கு ஒரு வினாடிக்கும் குறைந்த நேரத்தில் அசுத்தமான புகைப்படங்களும், கதைகளும், மேலும் ஓசைகளும் சென்று சேர்ந்து விடுகின்றது. நாம் நன்மைக்கான ஓசையை எழுப்புகின்றோம். ஆனால் அதிகமான மக்களின் காதுகள் வரை அது சென்றடைவதில்லை. ஆனால் தீய ஓசை உடனடியாக தன்னுடைய தாக்கத்தையும் காட்டி விடுகின்றது. எவராவது நம்முடைய விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்தினால் அவர்களின் பலரும் குழந்தைகளிடம் நடந்து கொள்வதைப் போன்று வாழ்த்துக்கள். நல்ல பணிகளைச் செய்கின்றீர்கள் என்று கூறுகின்றார்கள். ஆனால் அதற்குப் பிறகு இவ்வாறான மக்கள் எந்தத் தொடர்பும் வைப்பதில்லை.

ஆக நாம் குழந்தையைப் போன்று மகிழ்ச்சியடைந்து விட்டு அமர்வது நமது நோக்கத்தை முழுமைபடுத்துவதாகி விடாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சில மக்களுக்கு மட்டும் தூதுச் செய்தியை எடுத்துக் கூறிவிட்டு நாம் மிகப் பெரிய பணியை செய்து விட்டோம் என்று எண்ணக் கூடாது. மாறாக, நாம் உலகிற்கு நன்மையை கொண்டு சேர்ப்பதற்கும், தீமையிலிருந்து தூர விலக்கி வைப்பதற்கும் நம்முடைய முயற்சியை முழுமைப்படுத்த வேண்டும். உலக எதிர்ப்புகள், உலக தடைகள், அது முஸ்லிம்கள் தரப்பிலிருந்தோ அல்லது முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்தோ வந்தாலும் அதை நாம் நம்முடைய வழியிலிருந்து எவ்வாறு வேகமாக வீசக் கூடிய காற்று காய்ந்த துரும்பை தூக்கி சென்று விடுகின்றதோ அதுபோன்று நாமும் இந்த எதிர்ப்பை நம்முடைய வழியிலிருந்து அகற்ற முயற்சி செய்ய வேண்டும். இதிலிருந்து நமக்கு எந்த அளவுக்கு முயற்சியின் அவசியம் இருக்கின்றது என்பது நமக்கு புலனாகின்றது. அத்துடன் ஒவ்வொரு அஹ்மதியும் தமது ஆற்றலுக்கேற்ப தன்னால் இயன்ற அளவு இதில் பங்கெடுக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பணி முழு உலகிலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பது, நன்மையை பங்கிடுவதாகும். மேலும் இதுவே நம்முடைய பணியுமாகும். ஆக, நாம் எப்போது தீமைக்கு பதிலாக நன்மை செய்வோமோ அப்போது அந்த மக்களிலிருந்தே அன்பின் துளிகளும் விழும். மேலும் அம்மக்கள் முஹம்மதிய்ய மஸீஹின் கீழ் வருவார்கள். நமது நன்மைக்கு பதிலாக நம்முடைய தீய இயல்பு கொண்ட எதிரிகள் தரப்பிலிருந்து நமக்கு கஷ்டம் மற்றும் எதிர்ப்பின் வடிவில் பிரதிபலன் கிடைக்கலாம். மேலும் வந்து கொண்டிருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், சில மக்கள் எனது வேட்டை எனது பிடியின் கீழ் எப்படி வந்தது விட்டது என்றவாறு ஒரு சிங்கம் ஆட்டைப் பார்ப்பதைப் போன்று பார்க்கின்றனர். நமது நிலையோ அந்த நபரை ஒத்ததாக இருக்கின்றது. அவர் ஒரு சிங்கத்தை அல்லது ஒரு சிறுத்தையை வளர்க்கின்றார். அவை தனது கையிலிருந்து விடுபட்டு சென்று விட்டால் அதை எப்படியாவது தனது பிடியின் கீழ் கொண்டு வர எஜமானர் முயற்சி செய்கின்றார். ஏனென்றால் அந்த விலங்கிற்கு எந்த இழப்பும் ஏற்படக் கூடாது. அது எவ்வகையிலாவது பயனளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார். ஆனால் சிறுத்தையின் முயற்சி எஜமானரை கடித்து குதறுவதாகவே இருக்கின்றது.

பாகிஸ்தான் மற்றும் பிற நாடுகளில் எப்படிப்பட்ட மக்கள் மவ்லவிமார்களும், அவர்களின் தாக்கத்திலுள்ளவர்களும் இருக்கின்றார்கள் என்றால் நம்மீது பொய்யை புனைந்து நம்மை குதற விரும்புகின்றனர். ஆனால் நம்முடைய முயற்சியோ இவர்கள் இறைவனது பிடியில் வந்து விடாமல் எப்படியாவது

தப்பித்துவிட வேண்டும் என்பதேயாகும். இந்த மக்களின் எதிர்ப்பு நம்முடைய எந்தவொரு தனிப்பட்ட காரணத்தினால் அல்ல. பல்வேறு இடங்களில் பல்வேறு அஹ்மதிகளுக்கு நாங்கள் இவ்வாறு செய்து விடுவோம். அவ்வாறு செய்து விடுவோம். எனவே அஹ்மதிய்யத்தை விட்டு விட்டு தவ்பா செய்து எங்களுடன் சேர்ந்து விடுங்கள் என்று மிரட்டல் விடப்படுகின்றது. ஆக அவர்களது எதிர்ப்பு அஹ்மதிய்யத்தின் மீது தானேயொழிய. தனிப்பட்ட பகைமையல்ல. மேலும் அஹ்மதிய்யத்தின் மீதான எதிர்ப்பின் காரணமும் கூட அவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் முன்னேற்றமானது அவர்களிடம் மக்கள் வருவதைக் குறைக்கின்றது. இவ்வாறு அஹ்மதிகள் முன்னேற்றம் அடைந்து கொண்டே சென்றால் அல்லது அஹ்மதிய்யத் முன்னேற்றமடைந்து கொண்டேயிருந்தால் அந்த மக்களுக்கு பின்னடைவு ஏற்படுவது வெளிப்படையாக அவர்களுக்கு தெரிகின்றது. மேலும் அவர்களுக்கு இவ்வாறு ஜமாஅத் முன்னேற்றமடைந்து கொண்டே சென்றால் நாளை நம்மீது ஆதிக்கம் செய்து விடுவார்கள் என்பதும் தெரிகின்றது. நான் ஏற்கனவே கூறியது போன்று அஹ்மதிகளின் முன்னேற்றம் மேற்கத்திய நாடுகளையும், இவர்களுடைய தாக்கத்தின் கீழுள்ள நாடுகளையும் அஹ்மதிய்யத்திற்கு எதிராக திட்டம் தீட்டுவதற்கு கொண்டு செல்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் அரசாங்கங்களை கைப்பற்ற நாடுகின்றது என்பது இவர்களுடைய எண்ணமாக இருக்கின்றது. ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத் பரவுவது அந்த நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக, அந்த நாடுகளில் முன்பை விட அதிகமாக சாந்தி, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு காரணியாக அமைவதாகும். முஸ்லிம் நாடுகளிடமும் கூட நாம் அவர்களை பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மை அடியாருடன் இணைய நாம் கூறுவது அவர்களுடைய கஷ்டத்தையும், குழப்பத்தையும் அகற்றுவதற்கும் அவர்களுடைய முடிவு சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும். அவ்வாறே நாம் மற்ற மதங்களைச் சார்ந்த மக்களையும் இறைவனுடைய தண்டனையிலிருந்து காப்பாற்றவே விரும்புகின்றோம்.

ஆக, இன்று முஹ்மதிய்ய மஸீஹின் அடியார்களுடைய பணி என்னவென்றால், ஞானத்துடனும், முயற்சியுடனும் அல்லாஹ்வின் அருளைப் பெற்றவாறு நன்மை தொடர்பான இஸ்லாத்தின் போதனையை இவர்களுடைய உள்ளத்தில் பதியச் செய்ய வேண்டும். இதற்காக முழுமையாக முயற்சி செய்யுங்கள். இதற்காக உலகத்தில் ஒவ்வொரு இடத்திலும் அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், அதை துடிப்புடன் ஆக்குவதும் அவசியமாகும். அல்லாஹ் ஜமாஅத் மக்களுக்கும், ஜமாஅத் அமைப்பிற்கும் இதன் பக்கம் முழுமையாக கவனம் செலுத்தக் கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 31.10.14
Summarized by Majlis Ansarullah Bharat
Tamil Translation : Muallim. A.Khaleel Ahmad
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516